Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 17 (03-10-1991) வியாழக்கிழமை ஓசை: 227

## 309 வெற்றிடத்திற்கு, 7,500 பேர் விண்ணப்பம்

யாழ். மாவட்டத்தில் கிராமசேவையாளர் மற்றும் எழுதுவினைஞர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப்பரீட்சைக்குசுமார் ஏழாயிரத்துஐந்நூறு பேர் விண்ணப்பித்துள்ளனர். கிராமசேவையாளருக்கு நூற்றி ஒன்பது வெற்றிடங்களே உள்ளன. ஆனால் இதற்கு இரண்டாயிரத்து மூந்நூற்றிஐம்பத்தியேழுபேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கான பரீட்சை இப்போதைக்கு நடைபெறமாட்டாது எனவும் இவர்களுக்கான பரீட்சைகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களமேநடாத்தும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். மேலும் எழுதுவினைஞர்களாக இருநூறு பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை ரோந்து படகு மூழ்கடிப்பு:

# தீவக கடலில் கடற்புலிகள் சாதனை

## 83 இராணுவம் காலிழப்பு

[கொழும்பு]

சுமார் ஒருமாதகாலம் நீடித்த மணலாற்றுப் போரில் ஐந்து அதிகாரிகள் உட்பட 79 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 600க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். 83படையினர் கால்களை இழந்தனர். இதில் 15பேர் கொமாண்டோக்கள் ஆவர். இத்தகவலைச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## 5 கடற்படையினர் பலி: ஆயுதங்கள் மீட்பு

(நமது நிருபர்)

தீவகக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்துப் படகுகள் மீது கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் கடற்படைப்படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. ஒன்று தப்பி ஓடியது. ஐந்திற்கு மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் மீட்கப்பட்டன. புலிகள் தரப்பில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

தீவகக் கடற்பரப்பில் கடந்த பத்து தினங்களுக்குள் சிறிலங்கா கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரண்டாவது வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும். முதல் தாக்குதல் கடந்த 23ஆம் திகதி இடம் பெற்றது. அத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகளின் கடற் கண்ணியில் சிக்கி கடற்படைப் படகு ஒன்று சிதறியது. அதில் பயணம் செய்த ஏழு கடற்படையினர் கொல்லப்பட்டனர். சிலர் படுகாயமடைந்தனர்.

அடுத்த தாக்குதல் நேற்று முன்தினம் இரவு நயினாதீவு கடற்படை முகாமில் இருந்து காரைநகர் கடற்படை முகாம் நோக்கி வந்த இரு ரோந்துப் படகுகள் மீது நேரடித் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத் தாக்குதல் 10-20 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது.

சிறிலங்கா கடற்படை ரோந்து படகுகளை வழி மறித்து கடற்புலிகள் நடத்திய முதலாவது நேரடித்தாக்குதல் இதுவாகும். இக்கடற் போர் 45 நிமிடங்கள் வரை நீடித்தது.

சிறிலங்கா ஆயுதப் படையினரின் வலைப்பின்னல் அமைப்புடைய கடற்பரப்பினுள் ஊடறுத்துச் சென்று இத்தாக்குதல் நடாத்தப்பட்

## நவீனரக கடற்கண்ணிகள்: புலிகள் கண்டு பிடிப்பு

## மொசாட் வந்தமைக்கும் எனக்கும் தொடர்பில்லை

### - லலித்

(கொழும்பு)

இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு கொழும்பில் திறக்கப்பட்ட சமயம் நான் வர்த்தக கப்பல்துறை அமைச்சராகவே பணியாற்றினேன். அப்போது தேசிய பந்தோபஸ்து அமைச்சு உருவாக்கப்பட்டிருக்கவில்லை. எனவே இஸ்ரேலியர் வருகைக்கு என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அர்த்தமற்றவையாகின்றன என ஐ.தே.க அதிருப்தியாளர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்.

கேகாலையில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் பேசிய அத்துலத்முதலி மேலும் கூறுகையில் இஸ்ரேலியர் வருகையின் போது அமைச்சரவையில் அங்கம் பெற்றிருந்த பிரேமதாசாவும் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன் இஸ்ரேலிய பல்கலைக் கழகத்தில் நான் விரிவுரை வழங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தவறானது

[டில்லி]

'விடுதலைப்புலிகளுக்கு சிறிலங்கா ஆயுதம் வழங்கியிருந்தால்அது தவறானது' என இந்தியப் பிரதமர் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## சிறுபான்மையோர் கையில் திட்டமிடல் உள்ளதாம்

### -பிரேமச்சந்திரா கவலை

(கொழும்பு)

• சிறிலங்காவில் பொருளாதாரத் திட்டமிடல் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் திட்டப்படுகின்றன என்று முன்னாள் தொழில் அமைச்சரும், ஜனாதிபதி அதிருப்தியாளருமான ஜி. எம் பிரேமச்சந்திரா, கடந்த சனியன்று 'ராவய' என்ற சிங்கள

## அரச வட்டாரங்கள் அதிர்ச்சி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தற்போது புதுவகையான கடற்கண்ணி வெடிகளைப் பயன்படுத்தி வருவதாகவும், அவற்றின் செயல்திறன் அதிகமாக இருப்பதாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன. கடந்த ஞாயிறன்று(22-09 91)நடந்த இது போன்ற கடற்கண்ணித் தாக்குதலில் ரோந்துப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும் அதிலிருந்த இரண்டு அதிகாரிகள் உட்பட ஏழு கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடற்படையினரின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதோடு, கடற்படைக்கு நவீன ஆயுதங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

...டது. இத்தாக்குதல் எழுவைதீவுக்கும், காரைநகருக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் இடம்பெற்றது. இப்பகுதி காரைநகர் கடற்படை முகாமிற்கும், ஊர்காவற்றுறை

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் நடமாடும் செயலகம்

யாழ். மாவட்டத்தில் பல வருடங்களின் பின் நடமாடும் செயலகம் இயங்கவுள்ளது.

யாழ். செயலகக் குழு ஒன்று இதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி இக்குழு வடமராட்சிப் பகுதிக்குச் சென்று வடமராட்சி உதவி அரசாங்க அதிபர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாஸ்போர்ட் தரகர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பாஸ்போர்ட் தரகர்கள் பலரை கோட்டைப் பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்துள்ளார்கள்.

தரகர்களினால் ஏமாற்றப்பட்ட, தரகர்களின் தொல்லை தாங்கமுடியாத பலர் செய்த முறைப்பாட்டையடுத்து கோட்டை பொலிசார் கொழும்பு குடிவரவு, குடியகல்வு திணைக்கள வாசலில் இத்தரகர் வேட்டையை நடத்தி வருகிறார்கள்.

பாஸ்போர்ட் விண்ணப்பப் படிவம் பெறவும், கையளிக்கவும் நீண்ட வரிசையில் காத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## டெலிகொம் ஸ்தாபன பொதுமுகாமையாளர் தெரிவில் தமிழர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா டெலிகொம் ஸ்தாபனத்தில் நியமனம் பெற்றுள்ள ஏழு பொதுமுகாமையாளர்களில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் இடம்பெறவில்லை. இது அரசின் இனவிகிதாசாரக் கொள்கையை மீறும் ஒரு செயலாகும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் கொள்கைக்கு அமைய செப்டெம்பர் முதலாம் திகதி முதல் தந்தி தொலைத் தொடர்பு இலாகா சிறிலங்கா டெலிகொம் என்ற பெயரில் கம்பனி மயமாக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. தந்தி தொலைத் தொடர்பு இலாகாவைச் சேர்ந்த பல தகுதி வாய்ந்த சிரேஷ்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடிமனைகள் நோக்கி எறிகணைத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதியில் ஆங்காங்கே நிலைகொண்டிருக்கும் சிறிலங்காவின் இராணுவ, கடற்படையினர் பொதுமக்களின் குடியிருப்புக்கள்மீது பலமணி நேரம் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

காரைநகர் கடற்படை முகாம், நயினாதீவு கடற்படை முகாம், வலந்தலை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளிலுள்ள இராணுவ முகாம் ஆகியவற்றிலிருந்து நடாத்தப்பட்ட இத்தாக்குதல்கள் இரவு 10 30 மணிமுதல் நேற்று அதிகாலை வரை நீடித்தது.

தீவகத்தின் வேலணை, சரவணை, குறிகாட்டுவான்துறை, இறுப்பிட்டி, பெருங்காடு, சாத்தாகேணி, கரந்தலி, வங்களாவடி ஆகிய பகுதிகளிலும் முனாய், பொன்னாலை ஆகிய பகுதிகளிலும் பல எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இதனால் பொதுமக்களின் பலவீடுகளும், சில வர்த்தக நிலையங்களும் பலத்தசேதமடைந்துள்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். எம்.பிக்கள் 8-ம் திகதி பாராளுமன்றம் செல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் சுயேட்சைக் குழுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேரும் எதிர்வரும் எட்டாம் திகதியன்று பாராளுமன்றம் செல்வர் எனத் தெரிய வந்துள்ளது.

பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடர் இம்மாதம் எட்டாம் திகதியன்று ஆரம்பமாக இருப்பது தெரிந்ததே.

## இன்று இந்திய மீனவர் ஒப்படைக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள இருபத்தி ஒரு இந்திய மீனவர்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் இன்று ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இம் மீனவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்தியத் தூதரகத்திடம் ஒப்படைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

...இஸ்ரேலியர் வருகையின் ... ளால் திட்டப்படுகின்றன

## நரசிம்மராவ் மீது டெயிலி ஒப்சேபர் பாய்ச்சல்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவை டெயிலி ஒப்சேவர் பத்திரிகை சாடியுள்ளது.

அதிருப்தியாளர்களுடன் இந்திய ரகசிய உறவு கொண்டு சிறிலங்கா அரசின் ஸ்திரத் தன்மையைக் குலைக்க திட்டமிடுவதாக டெயிலி ஒப்சேவர் பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

இந்தியப் பாதுகாப்புப்படை இலங்கையில் இருந்த போது இந்தியப் படைக்கு எதிராகப் போர் புரிந்து கொண்டிருந்த புலிப் போராளிகளுக்கு சிறிலங்கா அரசு ஆயுதம் வழங்கியது தவறு என இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ்

(4ஆம் பக்கம் பார்க்க)

...யன்று 'ராவய' என்ற சிங்கள இதழில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கொள்கை திட்டமிடல் அமைச்சில் ஒரு சிங்களவர் தான் இருக்கிறார். மற்றவர்கள் சிங்களவர்கள் அல்லாத சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று அக்கட்டுரையில் பிரேமச்சந்திரா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### பெயர்ப்பட்டியல் வராததால்

## உணவு கையிருப்பு இருந்தும் விநியோகம் இல்லை

வேலணை உ. அ. அதிபர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கான ஆவணி மாதத்திற்குரிய இரண்டு கட்ட உலர் உணவு விநியோகமோ புரட்டாதி மாதத்திற்கான

(4ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியப் பிரதமர் தொடர்பான

## ஐலண்ட் பத்திரிகை செய்திக்கு வெளிநாட்டமைச்சு மறுப்பு

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் விடுதலைப் புலிகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் ஆயுதம் வழங்கியமையைத் தவறாகவே புரிந்து கொண்டுள்ளார் என ஐலண்ட் பத்திரிகை வெளியிட்ட செய்தி தொடர்பாக சிறிலங்கா வெளிநாட்டு அமைச்சு திட்டவட்டமான மறுப்பொன்றைத் தெரிவித்துள்ளது.

அதாவது விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை தமிழ்த் தேசிய இராணுவத்தை எதிர்ப்பதற்கே என்ற சிறிலங்காவின் வாதத்தை இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஏற்றுக்கொள்ளாமல் இந்திய இராணுவத்தை எதிர்ப்பதற்காகவே வழங்கப்பட்டதாக புரிந்துகொண்டுள்ளார் என்ற பொருள்பட வெளிவந்த செய்திக்கு மறுப்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஒக்டோபர் 5 ஆம் திகதி எழுச்சிநாளாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு வேங்கைகளின் நான்காம் ஆண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி எழுச்சிநாளாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

தமிழீழம் எங்கும் இத்தினத்தை எழுச்சி நாளாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. மேற்படி பன்னிரு வீரவேங்கைகளும் தமிழீழக் கடற் பிராந்தியத்தில் வைத்து 1987 ஆம் ஆண்டு சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டுசெல்ல முற்பட்டபோது சயனைட் அருந்தி வீரமரணம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீதி நிலைத்த பூமி....

வென்றது வீரம்... ... ... ...
தலை
நிமிர்ந்தது தர்மம்... ... ... ...
இனி
நிலைக்குமெம் நீதி!

மலைவாதிதின் வரலாற்றை
மாற்றிப் புரட்டிடத் தான்
முனைந்தனர் வீணர்கள்!—
ஆண்டாண்டாய் இங்கு
நீண்டு நிலைத்த
பயிரனைத்தும் வேரறுத்து
புதிதாய்ப் புற்கூட்டம்
விதைத்து வளர்க்கத் தான்
விரைந்தனர் புல்லர்கள்!

சாகுமா தர்மம்?

மலைவாறு மார்பினிலே
வரலாறாய் ஆயினர் எம்
இருநூறு வேங்கைகள்! —
மரபு
வரலாறு பிழைத்தது காண்!

நெஞ்சுரத்தின் இழைத்தெடுத்த
வெற்றிப் பொன்னாடை
பெற்றனள் தன் அன்னை! —
மனைவேற்ற மண் அன்னை!
மீட்புக் கதிர் பட்டு
மின்னுது பார்!

— செ. பொ. சிவனேஷ்

காஷ்மீருக்கு தன்னாட்சி

# பேச்சு நடத்த வருமாறு இந்திய அரசு அழைப்பு

(டில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்திற்கு தன்னாட்சி உரிமை வழங்குவது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த தயாராகஇருப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளதைவிட்டு பிரிவினைவாதக் கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன.

அல் அமார் மொகிடின் என்னும் ஐ.நா மன்றத்தின் அனுசரணையுடன் இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டுமென்றும், காஷ்மீரில் இருந்து வன்செயலைப்புசெய்யும் பாதுகாப்புபடையினர் திருப்பி அழைக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளது.

பேச்சுவார்த்தை நடத்த இந்திய அரசு முன்வந்திருப்பது நல்ல விடயம் எனக் கூறியுள்ள ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி பேச்சுவார்த்தைக்கு முன்பு சுயநிர்ணய உரிமையை இந்திய ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளது.

இந்திய அரசுடனான பேச்சுவார்த்தைகளின் போது பாகிஸ்தானும் கலந்து கொள்ள வேண்டும் என்று ஜம்மு-காஷ்மீர் மக்கள் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் வெறும் கேலிக் கூத்து என்று பாகிஸ்தான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா முஜாகிதீன் என்னும் குழு கூறியுள்ளது.


கூழாவடி ஆனைக்கோட்டையில் அமைந்திருக்கும்
கப்டன் பண்டிதர் படிப்பக
ஓராண்டு நிறைவு விழாவை முன்னிட்டு
நடாத்தப்பட்ட
சிட்டிழுப்பின் விபரம் வருமாறு

முதலாம் பரிசு இலக்கம் 063
இரண்டாம் பரிசு இலக்கம் 1293
மூன்றாம் பரிசு இலக்கம் 217

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்
1310, 957, 214

இந்த இலக்கத்துக்கு உரியவர்கள் கப்டன் பண்டிதர் படிப்பகத்தில் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(R- 1787) - நிர்வாகிகள்



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1991-10-25ஆந் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்:
தாவரவியல்
இரசாயனவியல்
கணிதமும்
புள்ளிவிபரவியலும்.
விலங்கியல்
பௌதிகவியல்

2. தற்காலிக செய்முறை காட்டுனர்:
தாவரவியல்
இரசாயனவியல்
விலங்கியல்
பௌதிகவியல்



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-10-30-ம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. உதவி நூலகர் தரம் 1/உதவி நூலகர் தரம் 11

2. ஆங்கிலப் போதனாசிரியர் தரம் 11

சம்பள அளவுத்திட்டம்:
உதவி நூலகர் தரம் 1:
ரூபா 8,000 - 5x250 - 9,250/-மாதமொன்றுக்கு
உதவி நூலகர் தரம் 11:
ரூபா 8,900 - மாதமொன்றுக்கு (நிலையானது) ஒரு வருடத்திற்கு ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் தகைமை பெற்றவர் ரூபா 4,500-10x200-6,500/- சம்பள அளவுத்திட்டத்தில் ரூபா 4,500/- சம்பளப்படியில் வைப்பார்.)
ஆங்கிலப் போதனாசிரியர் தரம் 11:
ரூபா 3,500 - 10x100-4,500 மாதமொன்றுக்கு.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களும் விபரங்களும் இப் பல்கலைக் கழகத்தின் உதவிப்பதிவாளர் / தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை தபாலில் பெற விரும்புவோர் மேற்குறித்த பதவிகளுக்குரிய / விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற 23X10 ச.மீ அளவுடைய தபாலுறை அனுப்பப்படல்வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.
குறிப்பு: உதவி நூலகர் தரம் I, தரம் II ஆகிய பதவிகளுக்கு பௌதிகவியல், கணிதம், புள்ளிவிபரவியல், பௌதிகவியல் அல்லது இரசாயனவியல் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு உயர் பிரிவைக் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1991-10-01. (B/3242)



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
நடாத்தும்
சர்வதேச ஆசிரியர் தின விழா

காலை நிகழ்ச்சி
இடம்: யா/ வைத்தீஸ்வரக் கல்லூரி
காலம்: 04-10-1991 காலை 11 மணி

மாலை நிகழ்ச்சி
இடம்: கைலாசபதி அரங்கு யாழ். பல்கலைக் கழகம்
காலம்: 04-10-91 மாலை 4.30 மணி

கல்வி அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், இளைப்பாறிய சங்க நிர்வாகிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைமைப் பணிமனை
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் த. மகாசிவம்
442, பருத்தித்துறை வீதி, பொதுச் செயலாளர்
யாழ்ப்பாணம்.
(B/3244)



பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A/L 91 DAY CLASSES

மீட்டல் வினாவிடை வகுப்புகள்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் த. ...
442, பருத்தித்துறை வீதி, பொதுச் செயலாளர்
யாழ்ப்பாணம்.
(B/3244)

## 1-வது பிறந்த நாள் வாழ்த்து

மந்துவில் ஒட்டமை வீதியைச் சேர்ந்த அகிலா தேவி தருநாவுக்கரசு தம்பதிகளின் செல்லப் புதல்வன் செல்வன் சுஜானம் (குக்ஷ) தனது 1-வது பிறந்த நாளை 1.10.91 இல் மிகவும் குதூகலமாகக் கொண்டாடினான்.

இவரை அம்பாளின் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென பெற்றோரும் உற்றாரும் வாழ்த்தினார்கள்.

தகவல்;
பெற்றோர்

(R/1796)

## யாழ்ப்பாண மாநகர சபை

## பொது அறிவித்தல்

நகர்ப்புற வரியிறுப்பாளர்களின் நலன் கருதி மின்சார நிலைய வளவில் யாழ். மாநகர சபையின் வருமானப் பகுதி உப அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 19.9.91 முதல் செயற்பட்டு வருகின்றது.

முற்பகல் 09.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இந்த அலுவலகத்தில் பணத்தைச் செலுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வரியிறுப்பாளர்கள் செலுத்த வேண்டிய வரிகள், வாடகைகள், மின்சாரக்கட்டணங்கள், உத்தரவுக்கட்டணங்களை உடனுக்குடன் செலுத்தி மாநகர சபை நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மாநகர அலுவலகம். மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம் யாழ்ப்பாணம்.
01-10-91 (B/3236)

மீட்டல் வினாவிடை வகுப்புகள்

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. வரதராஜன் |
| இந்துநாகரிகம்:- | திருமதி அருள்நங்கை |
| கணக்கியல்:- | திரு. சௌந்தி |
| வர்த்தகம்:- | திரு. லோகலிங்கம் |

ஆரம்பம்:- 07-10-91 திங்கள் 8.00 வ. ம

(B/3225)

பட்டப்படிப்புகள் கல்லூரி
தயாரித்து வழங்கும்
மகாகவியின்

## "கோடை"

(நாடகம்)

நெறியாள்கை: கந்தையா ஸ்ரீகந்தவேள்

காலம்: 6-10-91 ஞாயிறு பி. ப. 2-00 மணி
இடம்: யாழ். இந்துக்கல்லூரி
குமாரசாமி மண்டபம்

பிரவேசம்: மாணவர்கள் ரூபா 10/-
ஏனையோர் ரூபா 20/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வெளிவாரி மாணவர் ஒன்றியம்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/3249)

விலங்கியல்
பௌதிகவியல்

3. தற்காலிக போதனாசிரியர்
கணிதமும் புள்ளி விபரவியலும்

இப்பல்கலைக் கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரை யொட்டப்பட்ட 23X10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

இவ் வாண்டில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

—பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
02.10.1991.

(B/3241)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 03

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற் பரப்பில் வீரமரணமெய்திய

வேதமணி (லெப்டினன்ட், ஆண்டான்குளம்)

வவுனியா, கள்ளிக்குளம் பகுதியில் சிறிலங்காப் படை மற்றும் ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட இருபது தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு அச்சுவேலியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட கதிரிப்பாயைச் சேர்ந்த தமிழிளைஞன்

1989 ஆம் ஆண்டு பாண்டிருப்பில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

லெப். பாலன் (சிவலிங்கம் தவலோகப் பிரகாஷ் - பாண்டிருப்பு - 2)

1990 ஆம் ஆண்டு தொண்டமானாறில் எதிர் பாராத விதமாக எறிகணை வெடித்ததில் எமைப் பிரிந்த

ரவாஸ் (குமரகுரு ஜெயராசா, அல்வாய் வடக்கு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3233)

❋ சிந்தனைக்கு ❋

சாதுரியத்தின் முன்பு சிக்கல்கள் கரைந்திடும்
— பெஞ்சமின் டிஸ்ரேலி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 03-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ. எண் 05

## மதி நுட்பம் மிக்க இராஜதந்திர நகர்ச்சி

விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இராணுவ அமைப்பு. அதற்கு அரசியல், இராஜதந்திரம் என்பது இல்லை என்று இவ்வாறே சிறிலங்கா அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் இதுவரை கருதி வந்தன. இவ்வாறு இவை கருதியமைக்கு இந்த நாடுகளின் அதிகார வர்க்கத்தினரின் அகௌரவம், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் இராணுவ யுக்திகளையும், அரசியல்செயற்பாட்டையும் சரிவரப் புரிந்து கொள்ளாமை என்பன காரணம். இவ்வாறு கொழும்பு அரசியல் விமர்சகர்கள் தற்பொழுது கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் ஓர் இராணுவ அமைப்பு மட்டும் தான் என்ற கருத்து நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது. இதைப்பற்றி பல பத்திரிகையாளர்கள் தலைவர் பிரபாகரனைப் பேட்டி கண்ட போதும் கேள்வி எழுப்பியுள்ளனர். தலைவர் பிரபாகரன் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை வெளிப்படுத்தியுள்ள போதும் அவர்கள் பெரிதாகத் திருப்தி அடைவதாக இல்லை.

இவ்வாறு அவர்கள் திருப்தியடையாமைக்கு விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கையின் துரித செயற்பாடே காரணமாக இருந்து வந்துள்ளது. பொதுவாகவே ஆறுதலாக நடைபெறும் அரசியற் செயற்பாடுகளை புலிகள் விரைவாகவும், தொடராகவும் நடத்தும் இராணுவ நடவடிக்கைகள் மறைத்து விடுகின்றன என்பதே இதன் உண்மை நிலையாகும்.

விடுதலைப்புலிகளின் அரசியல் விவேகத்திற்கும், முன்னுணர்தலுக்கும் தமிழீழப் போராட்டத்தில் இந்தியாவின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை முதல் முதலில் இனம் கண்டு கொண்டதே அதற்குப்போதிய சான்றாகும். தமிழ்த் தலைவர்களும், ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களும் இலங்கையில் ஓர் பங்களாதேஷை இந்தியா உருவாக்கித் தரும் என்று கனவு கண்டு கொண்டிருக்க எந்தநிலையிலும் இந்தியா அவ்வாறானதொரு நடவடிக்கையில் ஈடுபடமாட்டாது. இந்தியாவையும் மீறி அவ்வாறு ஒரு நிலை உருவாகும் நிலை ஏற்படினும் அதைத் தடுத்து நிறுத்துவதையே தனது நோக்கமாகக் கொண்டிருக்கும் என்பதை புலிகள் ஆரம்பத்திலேயே தெளிவாக உணர்ந்திருந்தனர். அதனை [illegible]

### மொஸ்கோவின் மனநிலை

# "இப்பொழுது எங்களுடையது ஒரு புதிய தேசம்"

இரண்டு பெரிய யுத்தங்களையும், ஒரு உணர்ச்சி பொங்கும் புரட்சியையும் பார்த்த அனுபவம் வாய்ந்த அந்த 86 வயதுக் கிழவருக்கே கூட எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது. சோவியத்தின் சிவப்புக் கொடி பறக்கும் அரண்களுக்கு நடுவே அமைந்துள்ள அந்த வெள்ளிய கிரெம்ளின் மாளிகைமீது ஜார் காலத்து ரஷ்யாவின் நீலம், வெள்ளை, சிவப்புக் கொடி பறப்பதை உற்றுப் பார்த்தபடி, சங்கடத்தோடு அதன் எதிரே உள்ள நடைபாதையில் அமர்ந்திருக்கிறார் 86 வயது யூரி ரஸ்மோர்ஸ்கி. பற்பல வருடங்களுக்கு முன்பு புரட்சி முடிந்த சமயத்தில், நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளியான தன் தந்தையுடன் சென்று தொழிலாளர் கூட்டங்களில் கலந்து கொண்டதை நினைத்துப் பார்க்கிறார் யூரி.

அப்பொழுது எல்லாம் அதில் கலந்துகொள்பவர்கள் புதியதொரு சித்தாந்தம் தோன்றிவிட்டதன், புதியதொரு தேசம் உருவாகிவிட்டதன் அடையாளமாக ரஷ்யக் கொடியின் நீலம், வெள்ளைப் பகுதிகளைக் கிழித்தெறிந்துவிட்டு சிவப்புப் பகுதியை வைத்துக் கொள்வது வழக்கம். இப்போது அவையெல்லாம் பழைய வரலாறு. இப்போது புதிய வரலாறு மாஸ்கோவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள சோவியத் போர்வீரர்களுக்கான கல்லறையான வாகினோவ்ஸ்கி கல்லறைத் தோட்டத்தில் எழுதப்பட்டது.

ரஷ்ய நாடாளுமன்றக் கட்டடத்தின் முன் டாங்குகளால் நசுக்கிக் கொல்லப்பட்ட மூன்று வீரர்களின் சடலத்தின் அருகில் ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தார்கள். துக்கம் அனுஷ்டிக்க வந்த அவர்களில் பெரும்பாலானவர்கள் படைவீரர்கள். அவர்

நினைத்து நினைத்து அழுகிறார். பாரசூட் படையணியின் சார்ஜன்ட் அவர். உறுதியாக இருப்பதற்கு பயிற்றுவிக்கப்பட்டவர். நிறைய சாவைப் பார்த்துவிட்டார். ஆப்கானிஸ்தானின் காபூல், கோஸ்ட், ஜலாலாபாத் ஆகிய இடங்களில் முஜாஹிதீன்களுடன் கடும் மோதல்களைச் சந்தித்த அனுபவசாலி.

''அத்தனை படுகொலைகள், நாசம் விளைவித்தது எல்லாமே தவறு. இந்த நாட்டில் ஜனநாயகம் இருந்திருந்தால் நான் 18 வயதில் கொலைகாரனாக இருந்திருக்க மாட்டேன்'' என்கிறார் அவர். அவரது அருகில் இருக்கும் மூன்று சிப்பாய்களும் அதை தலையசைத்து ஆமோதிக்கின்றனர்.

ஒவ்வொருவரும் ஆப்கானிஸ்தானில் அனுபவப்பட்டவர்கள். அலெக்சாந்தரோவ் மோங்கோவெவ் அங்கு முற்றுகையில் சிக்கியிருந்தவர். காபூலின் முக்கிய நுழைவாயிலான சலாங் கணவாய் வழியாக படைகள் நுழைவதற்காக கடும் சண்டையில் போரிட்டவர் அலெக்சாந்தர் ஷாப்பகோவ். இவர்கள் எல்லோருமே போரை வெறுக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே கம்யூனிசத்தை வெறுக்கிறார்கள்.

'V' சின்னத்தை ஹெட்பேண்டாக அணிந்து கொண்டிருக்கும் கான்ஸ்டான்டின் அலெக்செஃப், ''ஆப்கானிஸ்தான் சண்டைக்குப் பிறகு அரசியல் புத்தகங்கள் புரிய தங்களுக்கு ஒரு பயனுமில்லை என்று சிப்பாய்கள் எதிரிகளிடம் சொன்னார்கள். டாங்கு வண்டியின் பீரங்கிகளை வேறுபுறமாகத் திருப்பியதன் மூலம் இந்த யுத்தத்தை அவர்கள் வென்றிருக்கிறார்கள்'' என்கிறார். மிகக் குறைந்த தொண்டர்களின் துணையோடு வெள்ளை மாளிகையை இராணுவத்திடமிருந்து காக்க முனைந்தவர்' என்ற கீர்த்தியான ஒரு மேஜர் ஜெனரல் என்பது ஏதோ தற்செயலான விஷயமல்ல. முன்னாள் போர்ச் செயலாளர் சொர்க்கோர் ஒரு ரஷ்ய இளைஞரும் [illegible] ஆக ஆப்கானிஸ்தானில் பணி புரிய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியதைப்பற்றி இப்போது நினைத்துப் பார்க்கிறார் அந்த மேஜர் ஜெனரல் வாடின் பாகாதின.

> 'கொர்பச்சேவ் என்பது ஒரு பொய்த்துப் போன நம்பிக்கை. பெரஸ்ற்ரோய்கா என்பது பழைய கதை. இப்பொழுது எங்களுடையது ஒரு புதிய தேசம்''

இன்றைய மாஸ்கோ முற்றிலும் வேறுவிதமான உணர்ச்சியின் பிடியில் சிக்கியிருப்பதை செர்கோ பார்க்க நேர்ந்தால் ஆத்திரப்படுவார். இந்த உணர்ச்சித் தீவிரத்தின் மையம், மாஸ்கோவிலுள்ள ஜெர்ஷின்ஸ்கி சதுக்கம். அங்கு

கூத்தாட பொருத்தமான சதுக்கம் வேறு ஏது? நுழைவாயிலில் நின்றபடி ஜெர்ஷின்ஸ்கி சிலை பீடத்தின் மீது தன்னுடைய அபிப்பிராயத்தை எழுதுகிறார் 15வயது மரீனா ஸ்மிர்னோவா. 'பித்தலாட்டக்காரன், மடையன், கொலைகாரன், முட்டாள்.'' அவர் கோபப்படுவதற்குக் காரணம் இருக்கிறது 'அவர்கள் எனது தாத்தாவைக் கொன்றார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒருவரைக் கொன்றார்கள். இவ்வுலகை ஒருபோதும் அசுத்தப்படாதபடி நாம் கம்யூனிசத்தைக் குழிதோண்டி ஆழப் புதைக்க வேண்டும்' என்கிறார். சுத்தியலும், உளியும் கொண்டு சிலையைப் பெயர்த்துக் கொண்டிருக்கும் 34 வயது டேவிட் லயனோவ் நிமிர்ந்து பார்த்து தன்னுடைய வேலையை ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு இரைகிறார். 'இந்தக் கற்களை எடுத்துக் கொண்டுபோய் உங்கள் இந்திய கம்யூனிஸ்ட்கள் மீது வீசுங்கள். அவர்களை உதைத்து வெளியே அனுப்புங்கள். இல்லையென்றால் எங்களுக்கு ஆனதுதான் உங்களுக்கும் நடக்கும். எங்கே மக்கள் மோசமாக வாழ்கிறார்களோ அங்கேதான் கம்யூனிஸ்ட்கள் கொழுக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?' லயனோவ் ஒரு புரட்சிகர லிதுவேனியனோ, உக்ரேனியனோ அல்ல. சுத்தமான ரஷ்யன்.

14வயதாகும் அலெக்சாந்தர் செவ்யேவும் அப்படித்தான். லெனினின் நண்பரான யகோவ் ஸ்வெர்ட்லோவ் சிலை உடைக்கப்பட்ட இடத்தருகில் நண்பர்களோடு பேசிக் கொண்டிருக்கிறான். ரஷ்ய மொழியில் கெட்ட வார்த்தைகள் எல்லா இடங்களிலும் எழுதப்பட்டிருக்கின்றன. மேலை நாட்டுப் பத்திரிகைக்காரர்களுக்குப் புரிவதற்காக

கொண்டிருக்கும் என்பதை புலிகள் ஆரம்பத்திலேயே தெளிவாக உணர்ந்திருந்தனர். அதனை மக்கள் முன்னும் வைத்தனர். ஆரம்பம் முதலே ஏனைய குழுக்கள் போன்று இந்தியாவின் கைப் பாவைகளாகாமல் சொந்தக் காலில் நிற்கத் தலைப்பட்டனர். இந்தியாவின் இராஜதந்திரத்திற்குச் சவாலாக விளங்கினர். இதுவே இலங்கை தொடர்பான இந்தியாவின் இராஜதந்திர தோல்விகள் அனைத்திற்கும் முதற்படியாக அமைந்தது.

இதேபோன்று விடுதலைப் புலிகள் பெற்ற மற்றுமொரு இராஜதந்திர அரசியல் இராணுவ வெற்றிதான் இந்திய இராணுவத்தைத் தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்றியமை. இந்திய இராணுவம் இலங்கை மண்ணில் கால்வைத்த போது இரண்டு வருடங்களுக்குள் வெளியேறத் தொடங்கி விடும் என எவரும் எதிர்பார்க்கவில்லை. இந்திய இராணுவத்தரப்பினரே வெளிப்படையாக தாம் இங்கு நீண்டகாலம் தரித்திருக்கப் போவதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில்தான் ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை என்னும் பெரியதொரு அரசியல், இராஜதந்திர முயற்சியை புலிகள் ஆரம்பித்தனர். இந்த இராஜதந்திர செயற்பாடும், விடுதலைப்புலிகளை கொடுத்த தொடர்ச்சியான இராணுவ நெருக்குதலும் இந்திய இராணுவத்தை மிக விரைவிலேயே இலங்கையை விட்டு வெளியேற்றியது.

இதற்கு அடுத்த பெரும் இராஜதந்திர நடவடிக்கை தான் தற்பொழுது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைப் புலிகள் அணுக முற்பட்டுள்ளமையாகும்.

புலிகளின் கடந்த கால இந்த அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகள் அவர்கள் அரசியலை வெகு நுட்பமாகக் கையாண்டு வருவதைக் காட்டுகின்றது. தமிழர் தேசிய நலன் ஒன்றையே தமது இலக்காகக் கொண்டுள்ள அவர்கள் அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியும் இல்லை என்ற சித்தாந்தத்தை வெகு சாமர்த்தியமாகக் கடைப்பிடித்து வந்துள்ளார்கள்/வருகின்றார்கள். ஸ்ரீலங்கா, இந்தியா அதிகார வர்க்கத்தினர் எண்ணியது போல் விடுதலைப்புலிகள் தனியாக ஓர் இராணுவ அமைப்பாகவே இருக்குமானால் இது வரையில் புலிகள் இயக்கம் என்ற ஒன்று இல்லாது அழிந்தே போயிருக்கலாம். "இரண்டாயிரம் சாறம் கட்டிய பொடியளை" ஒரு லட்சம் இந்திய இராணுவம் துடைத்தெறிந்திருக்கலாம். ஆனால் அவர்கள் நடத்திய மதிநுட்பமிக்க அரசியல் தான் இந்திய இராணுவம் வெளியேறிய போது அவர்களைப் பல ஆயிரங்களாகப் பெருக்கியிருந்தது.

வர்கள் படைவீரர்கள். அவர்களில் பலர் விசேஷ நிகழ்ச்சிகளில் அணியும் மெடல்களெல்லாம் பொருத்தப்பட்ட யூனிபாரம் அணிந்து கண்ணீர் மல்க நின்றிருந்தார்கள். முதன்முறையாக செம்படை தான் பறித்த உயிர்களுக்காக கண்ணீர் சிந்துகிறது. உண்மையைச் சொல்லப்போனால் இனிமேல் அது செம்படை அல்ல. மார்பில் தனது படையணியின் இலச்சினை பொறித்த கறுப்பு உடை அணிந்து நிகழ்ச்சிக்கு வந்திருந்தார் அலெக்சாந்தர் ஹோவ்சோனிகோல் (22) எல்ட்சினையும், அவருடன் சேர்ந்து ரஷ்ய நாடாளுமன்றக் கட்டடத்தையும் காப்பதற்காக நின்று கொண்டிருந்தவர்களை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட படையின் ஒரு சிறு பிரிவிற்கு தலைமை ஏற்றுச் சென்றவர் அவர். 'நாங்கள் யாரும் சுடப்போவதில்லை என்பது கூறப்பட்ட தருணத்திலேயே எனக்குத் தெரியும். இனிமேல் அரசியலில் சோவியத் இராணுவத்திற்கு இடம் கிடையாது" என்றார் அந்த இளம் டாங்கி அணித்தலைவர்.

"கொர்பசேவ் என்பது ஒரு பொய்த்துப்போன நம்பிக்கை. பெரஸ்ற்ரோய்கா என்பது பழைய கதை. இப்போது எங்களுடையது ஒரு புதிய தேசம்" என்றார் அவர்.

எல்லோருமே அவர்போல உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்களாக இருந்து விடவில்லை. சடலங்களுக்கு அருகே நின்று கொண்டிருக்கும் 23 வயது வேரலோத்யாவினோஜாடோ

ரும் கம்யூனிசத்தை வெறுக்கிறார்கள்.

தோல்வியில் முடிந்த புரட்சியைப்பற்றி வரலாறு எழுதப்படும்போது சோவியத் இராணுவத்தின் 'ஆப்கான் தனிப்பான்மை' எந்த அளவிற்கு புதிய ரஷ்யாவை உருவாக்குவதில் பங்கு வகித்தது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ரஷ்ய நாடாளுமன்றத்தின் படிக்கட்டுகளில் முதல் டாங்கை எரித்த ஹிப்பி போன்று இருந்த இளைஞன் ஆப்கானிஸ்தானில் களம் கண்டவன். வெள்ளை மாளிகை என்று அழைக்கப்படும் 24 மாடி நாடாளுமன்றக் கட்டடத்தில் கிடார் வாசித்துக் கொண்டு கோஷம் முழங்கிக் கொண்டு "பயங்கரவாதத் திற்கெதிரான இசைக்கச்சேரி" நடத்தி வந்த பெரும்பாலான இளைஞர்களும் ஆப்கானிஸ்தானில் போரிட்டவர்கள் தான். நீண்ட தலைமுடி, வண்ண வண்ண உடைகள். ஒரு காதில் வளையம், தாடி என்ற தோற்றத்தோடு பல இளைஞர்கள் இன்னும் அந்தக் கட்டடத்திலேயே இருந்து வருகிறார்கள். வியட்நாம், அமெரிக்காவிற்கு ஹிப்பிகளை அளித்தது என்றால் ஆப்கானிஸ்தான் ரஷ்யாவில் 'ஆப்கான்டீஸ்'களை உருவாக்கி இருக்கிறது. போரில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள் பரிசாகக் கொடுத்த இராணுவ சீருடைகள், போரின்போது விஷவாயுவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள பயன்படுத்தப்படும் முகமூடிகள், ஆயுதப் பெட்டிகள் ஆகியவற்றைத் தூக்கிக் கொண்டு அலைகிறார்கள். இராணுவ வீரரின் சட்டையில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட

ஜெர்ஷின்ஸ்கி சதுக்கம். அங்கு ரஷ்ய உளவு ஸ்தாபனமான கே. ஜி. பியை நிறுவிய ஜெர்ஷின்ஸ்கியின் 20 டன் எடையுள்ள சிலை பகாசமாக ஸ்டாலினிசத்தின் அதிகாரத்திற்கும் கொடுங்கோன்மைக்கும் அடையாளமாக நின்று கொண்டிருந்தது. இருவாரங்களுக்கு முன்பு கே ஜி பி அதிகாரிகள் கண்ணெதிரேயே இராட்சத கிரேன்கள் மூலம் இறக்கப்பட்ட அந்தச் சிலை உதைக்கப்படுது இப்போது ஒரு ஞாபகச் சின்னமாக தினம் நூற்றுக்கணக்கான பேர்களுக்குக் கொஞ்சம் இடித்து எடுத்துக்கொண்டு போவதால் சின்னதாகிக் கொண்டேவரும் அதன் பீடம், சுதந்திரவாதிகள் குழுமும் இடமாகி இருக்கிறது. சிலர் பாடுகிறார்கள், சிலர் கிடார் வாசிக்கிறார்கள், இளம் காதலர்கள் இங்குவந்து கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொள்கிறார்கள் "நியூயார்க்கிற்கு ஒரு கிரீன்விச்வில்லேஜ், பாரீசுக்கு ஒருமாண்ட்மார்ட்ரே ஹில், மாஸ்கோவிற்கு இப்போது ஜெர்ஷின்ஸ்கி சதுக்கம்" என்கிறார் அங்கு நின்று ரசித்துக்கொண்டிருக்கும் ஒரு இளம் அமெரிக்க அதிகாரி.

ஸ்டாலினிச பயங்கரத்தின் அடையாளமாக இருக்கும் ஜெர்ஷின்ஸ்கி சதுக்கத்தை விட, சித்தாந்தத்தை தூக்கி உடைப்பில் போட்டுவிடுக்

"லெனின் நமக்குச் செய்தவற்றை நாம் எப்படி மறக்க முடியும்? ரஷ்யர்கள் எப்படி இப்படி நன்றி கெட்டவர்கள் ஆகமுடியும்?"

காரர்களுக்குப் புரிவதற்காக ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன. 'ஜார் நிகலாய் II ஐக் கொன்ற யகேசல் ஸ்வர்ட்லோவை நாங்கள் வெறுக்கிறோம். ஜார் மோசமானவராக இருந்திருக்கலாம். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி ஜார்கள் மகா மோசமானவர்கள்" என்று அவன் சொன்னதும் சுற்றி இருப்பவர்கள் கைதட்டுகிறார்கள். சற்றுத் தள்ளி மார்க்சின் சிலை அமைந்திருக்கிறது. தாறுமாறாக பெயின்டினால் அலங்கோலப்படுத்தப்பட்டிருக்கும் கம்பீரமான அந்தச் சிலையில் ரஷ்ய மொழியில் எழுதப்பட்டிருக்கிறது "என்னை மன்னியுங்கள்"

அக்டோபர் சதுக்கத்தில் அமைந்துள்ள லெனினின் பிரமாண்டமான சிலை எப்படித் தப்பியது என்பது இப்போதும் ஒரு ஆச்சரியம். நான் ஒவ்வொரு நாளும் அந்த சிலை அகற்றப்படும் என்ற நம்பிக்கையில் ஏராளமான போட்டோகிராபர்கள் அந்த சதுக்கத்தில் காத்திருந்தார்கள். ஆனால், சிலர் அந்தச் சிலையின் மீது பொருள்களை விட்டெறிந்துவிட்டுப்போனதோடு சரி. கிரேன்கள் வரவேயில்லை. ஆனால், ஒரு நாள் சூரியன் மறைகிற அந்திப் பொழுதில் வித்தியாசமான ஒரு சம்பவம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பன்னிரு புலிகளின் வீரமரணம் எதிர்கால சந்ததிக்கு பாடமாகட்டும்

(நமது நிருபர்)

"எமது மண்ணையும், மக்களையும் காப்பாற்ற விடுதலைப் புலிகளின் தலைவர்களே தம்மை விலையாகக் கொடுக்கத் தயாராக உள்ளனர் என்பதையும் இந்திய அரசு எமக்கு உதவுவதற்காகப் படைகளை அனுப்பவில்லை; தனது சுயநலத்திற்காகவே அனுப்பியது என்பதையும், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. போராடியே எமது மண்ணை மீட்க வேண்டும் என்பதையும் லெப். கேணல் குமரப்பா மற்றும் புலேந்தி அம்மான் உட்பட பன்னிரு வேங்கைகளின் வீரமரணம் எடுத்துக் காட்டுகின்றது."

இவ்வாறு பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலையில் வடமராட்சி பாடசாலை அதிபர்கள் மாநாட்டில் நேற்று முன்தினம் உரையாற்றிய திரு. பரா குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் அதிபர்களாகிய நீங்கள் எமது போராட்டத்தைப் பற்றியும் வீரவேங்கைகளுடைய வரலாற்றைப்பற்றியும் இன்றைய எமது சந்ததியினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் எடுத்துக் கூற வேண்டிய மிகப் பெரும் பொறுப்புடையவர்களாவர். போராட்டத்தில் ஆசிரியர்களுடைய பங்கு மகத்தானது. உங்கள் கடமையை நீங்கள் சரிவரச் செய்வீர்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். எதிர்வரும் 5 ஆம் திகதி தீருவிலில் நடைபெறவிருக்கும் குமரப்பா, புலேந்தி அம்மான் உட்பட பன்னிருவேங்கைகளின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பெருந்தொகையான மாணவ, இளைஞர்களை பங்குபற்ற வைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். தேசிய ஆசிரியர் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் அரசண்ணா, ஆஞ்சநேயர், அருந்தவராஜா ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர்.

--- பரா

## விமானக் கட்டணம் அதிகரிப்பு

(புதுடில்லி)

இந்தியன் ஏயர்லைன்ஸ் விமானத்தின் கட்டணங்கள் இருபது சதவிகிதத்தால் அதிகரிக்கப்படவுள்ளன.

இந்த அதிகரிப்பில் பதினொரு சதவிகிதம் எரிபொருள் விலை ஏற்றத்திற்காகவும் மற்றைய ஒன்பது சதவிகிதம் அடிப்படைக் கட்டணத்திற்காகவும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசகணக்கில் விதிக்கப்பட்ட உள்நாட்டு விமான பயண வரியும் பதினைந்து சதவிகிதத்தால் அதிகரிக்கப்படும் என புதுடில்லியில் இந்தியன் ஏயர்லைன்ஸ் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இப்பொழுது...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ந்தது. ஒரு நடு வயதுப் பெண் காரை நிறுத்தி விட்டு இறங்கி வந்தாள். கார் நிறைய மலர்கள். ஒரு பூங்கொத்தை எடுத்துக்கொண்டு சிலையை நோக்கி நடந்தாள். என்ன நடக்கிறது

## நன்றியுடையவராக இருக்க பிரேமா மறந்துவிட்டார்

(கேகாலை)

--காமினி

மக்களின் இரத்தத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி ஞானஸ்தானம் பெற்றுள்ளதாக 1988 தேர்தல் கூட்டங்களில் பேசிய ஜனாதிபதி, அவரின் வெற்றிக்குக் காரணமாயிருந்த சாதாரண மக்களுக்கு நன்றியறிதலாக இருக்க மறந்துவிட்டார்.

கேகாலையில்கடந்தவெள்ளியன்று நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய போது முன்னாள் அமைச்சரும் நுவரேலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான காமினிதிசாநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய ஆபிரிக்கச் சர்வாதிகாரி பொக்காஸாவையும், ஜனாதிபதி பிரேமதாசாவையும் நேர்கோட்டில் வைத்துத் தான் பார்ப்பதாகக் கூறிய

முடி, அரியாசனம், உடை ஆகியவற்றின் மாதிரியைப் பெற்று வருமாறு பிரான்ஸுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பினார். தனது மணிமுடி, அரியாசனம் உடை ஆகியனவற்றை நெப்போலியனுடையதைப் போன்றுவடிவமைத்தார். முடி தரித்து, ஆடைஅணிகள்பூண்டு நெப்போலியனைப்போல் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். இடையில் மக்கள் தமக்குஎதிராகக் கிளர்ந்தெழுந்ததைப் பார்த்த பொக்காஸா சொந்த நாட்டை விட்டு ஓடவேண்டியதாயிற்று.

ஜனாதிபதி தேர்தலின் போதெல்லாம் சாதாரண மட்டத்தில் இருந்து வந்ததா

## கொழும்பு அம்புலன்ஸ் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான நோயாளர்களுக்கான அம்புலன்ஸ் சேவையை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை ஆரம்பித்துள்ளது.

விசேட சிகிச்சைக்காக கொழும்புக்குச் செல்ல வேண்டியிருக்கும் நோயாளர்களின் நலன் கருதி மேற்படி சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அம்புலன்ஸ் சேவை தற்பொழுது முதற் கட்டமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மட்டுமே மேற்கொள்ளப்படவிருக்கிறது. (க)

## காதல் விவகாரம் 6பேர் கொலையில் முடிந்தது

கர்நாடக மாநிலத்தில் 'தாழ்த்தப்பட்ட' ஒருவருக்கும், உயர்சாதிப் பெண்ணுக்கு மிடையிலான காதல் விவகாரம் 6 பேர்களின் கொலைக்குக் காரணமாக இருந்தது.

சுரேஷ்பவிவார் என அழைக்கப்படும் 21வயது நிரம்பிய 'தாழ்த்தப்பட்ட' இனத்தைச் சேர்ந்த இளைஞன் தனது காதலியாகிய 19 வயது நிரம்பிய உயர் சாதிப் பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தார். அப்பெண்ணின் பெயரையே தனது கடைக்கும் வைத்திருந்தார்.

இதனால் சுரேஷ்பவிவார் உட்பட அவரது நான்கு சகோதரர்கள், ஒரு நண்பர் ஆகியோர் இருந்த வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டதுடன் ஆறு பேரும் கோடரிகள், வாள்களால் வெட்டிக் கொல்லப்பட்டதாக 'டைம்ஸ் ஓவ் இந்தியா' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

### மொஸாட்

கியமைக்காக பிரேமதாசா உண்மையான தேசிய வாதியாக இருந்தால் பெருமைப்பட வேண்டும் என்றும் சொன்னார்.

### கடற்படை

இராணுவ முகாமிற்கும் மிக அண்மையில் உள்ளதோடு, நயினாதீவு கடற்படைத் தளத்திற்கும் அண்மித்ததாகவே உள்ளது.

இம்மோதலில்இந்திற்குமேற்பட்ட சிறிலங்கா கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

## கொழும்பில் வன்முறை வெடிக்கலாம் - லலித்

(கொழும்பு)

சிறிலங்காப் பாராளுமன்றத்திற்கு ஈரோஸ் உறுப்பினர்கள் மீண்டும் வந்திருப்பது தொடர்ந்து கொழும்பில் வன்முறை தொடங்கும் வாய்ப்புக்கள் இருப்பதாக பிரேமதாசா அதிருப்தியாளர் லலித் அத்துலத்முதலி கூறியிருக்கிறார்.

மேலும் தமக்கு எதிராக அரசின் கொலைப்படை கற்றி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 'சார்க்' தலைவர்களுக்கு தாஜ் சமுத்திராவில் இடவசதி

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவிருக்கும் தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகளின் (சார்க்) உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள வரும் தலைவர்கள் 'தாஜ் சமுத்ரா' ஹோட்டலில் தங்குவதற்கு இடவசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக இந்த ஹோட்டலில் 220 அறைகள் நவம்பர் முதலாம் திகதி முதல் ஒதுக்கப்பட்டுள்ளன. செய்தியாளர்கள் தங்குவதற்கென ஹோட்டல் இன்டர்கொன்டினென்டலில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

நாடுகளின் தலைவர்களுக்கிடையிலான சம்பிரதாயபூர்வமான பேச்சுவார்த்தைகள் கண்டிஇங்ஸ் பவிலியனில் நடைபெறவுள்ளது. அக்டோபர் 31ம் திகதி முதல் சிரேஷ்ட அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை தொடங்கும். வெளியுறவுச் செயலாளர்களின் நிரந்தரகமிட்டிக் கூட்டம் நவம்பர் 2முதல் 4வரையிலும் நவம்பர்5ம் 6ம்திகதிகளில் வெளிவிவகார அமைச்சர்களும் சந்தித்துப்பேசுவார்கள்.

### ஐலண்ட் பத்திரிகைச் செய்திக்கு

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் இந்திய அமைதிகாக்கும் படையினரையோ அல்லது இலங்கை இராணுவத்தினரையோ தாக்குவதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அரசாங்கம் ஆயுதம் வழங்கியதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் விஷமத்தனமானவை, வேண்டுமென்றே திரித்துக் கூறப்படுபவை என்று கூறி இலங்கை அரசாங்கம் வன்மையாக மறுத்துள்ளது அத்துடன் தமிழ் தேசிய இராணுவம்

என்ற பொது எதிரியுடன் மோதுவதற்காகவே விடுதலைப்புலிகள் பயன்படுத்தப்பட்டதாகவும், அந்த நாட்களில் இந்திய அமைதி காக்கும் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்றும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது மேலும் இந்திய அமைதி காக்கும் படை தனது படைப்பிரிவுகளைப் படிப்படியாக மீளப் பெறவும் ஆரம்பித்திருந்தது. எனவே அரசாங்கம் எதிர் நோக்க வேண்டியிருந்த எதிரி சட்ட விரோதமான தமிழ் தேசியஇராணுவமாகவே இருந்தது. இந்நிலையைக்கையாள்வதற்காகவே இலங்கைப் பாதுகாப்புப் படைகள் விடுதலைப் புலிகளோடு ஒத்துழைத்ததாகவும் வெளிவிவகார அமைச்சின் அறிக்கை கூறுகிறது. இந்த நேரத்தில் சகல உண்மைகளையும் சரியாக அறிந்து கொண்டால்

### குடிமனைகள்

ன. இவற்றைவிட உலங்கு வானூர்தி ஒன்று வானில் இருந்தும், பீரங்கிப் படகுகள் ஆங்காங்கே கடற்பரப்பில் இருந்தும் சரமாரித் தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதல்களிற் பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தின் கூரைபகுதி சேதமடைந்தது. (க, 20, 22)

தான். என்ன நடக்கிறது என்று தெரியாமல் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க சிலையின் காலடியில் பூங்கொத்தை வைத்து விட்டு வணங்கி நின்றாள். பொங்கி வந்த கண்ணீரை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். கூட்டம் அவளை இடித்துத்தள்ளி கோபத்துடன் திட்டியது. கூட்டுறவு அமைப்பொன்றில் தொழிலாளியாகப் பணியாற்றும் அந்தப் பெண் சலீனா லெவிடோவ்னா கேட்டார்: ''லெனின் நமக்குச் செய்தவற்றை நாம் எப்படி மறக்க முடியும்?'' ரஷ்யர்கள் எப்படி இப்படி நன்றி கெட்டவர்கள் ஆகமுடியும்?

சோவியத்யூனியனின் வருங்கால வரலாற்றில் குறிக்கப்படும் முரண்பாட்டை தன்னுடைய செய்கையின் மூலம் உணர்த்தி விட்டார் அந்தப் பெண்மணி.

நன்றி: இந்தியாடுடே
செப்டம்பர் 1991


வர்த்தக
வகுப்புக்கள்

ஆண்டு 9, 10, 11

இதற்கான மீட்டலும்
வினா - விடை
வகுப்புக்களும் ஆரம்பம்
05-10-1991

ஆசிரியர்:
S. பகேந்திரன்

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(B-3238)


யும் நேர்கோட்டில் வைத்துத்தான் பார்ப்பதாகக் கூறிய காமினி, பதவியில் இருந்த சமயம் பொக்ஸா தன்னை ஒரு நெப்போலியனாக நினைத்துச் சருமமாற்றினார்என்றார்.

நெப்போலியனின் மணி மட்டத்தில் இருந்து வந்ததாகக் கூறிக் கொண்ட பிரேமதாசா தன்னைச் சுற்றி ஒரு வரலாற்றைக் ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் என்றார் அவர்.

## கட்டுப்பெத்தை தொ. நு. கல்லூரியில்

# மாணவர் தொகையில் இனவிகிதாசாரம் இல்லை

## -தொண்டமான்

(கொழும்பு)

கட்டுப்பெத்தையிலுள்ள இலங்கை ஜெர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தில் இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்ட தமிழ் பேசும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதை சுற்றுலா கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான் நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மெண்டிஸின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

கடந்த ஏப்ரலில் 213 சிங்கள மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்ட அதேவேளை 12 தமிழ் மாணவர்களே சேர்த்துக்கொள்ளப்பட்டனர்

ஆகவே இங்கு அரசின் கல்வி பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புக்களில் இனவிகிதாசார பகிர்வுமுறை கடைப் பிடிக்கவில்லையென்று போதியளவு மாணவர் இப்பயிற்சிக்கு விண்ணப்பித்திருந்தனர் என்பதை சுட்டிக்காட்டி இதனை மீளாய்வு செய்து இனவிகிதாசார முறையைப் பேணும் படியும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

## ஒருவருட காலத்தின்பின்

# பாடசாலை உபகரணங்கள் ஒரு தொகுதி வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டபாடசாலைகளுக்கான உபகரணங்கள் யாழ். வந்து சேர்ந்துள்ளன.

கடந்த ஒரு வருடத்தின் பின் இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் இதுவரை இருந்து வந்த தட்டுப்பாடுகள் ஓரளவு நிவர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. பாடசாலைகளுக்கானவெண்கட்டிகள் வாளிகள், தட்டச்சு இயந்திரங்கள்மற்றும் கல்வித்திணைக்கள படிவங்கள் ஆகியவை லொறிமூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவை தேவையான பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாக கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் தெரிவித்தார். (ச)

பட்ட சிறிலங்கா கடற்படையினர் கொல்லப்பட்டனர். ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டது புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத ஒரு படகு தப்பியோடிவிட்டது.

மூழ்கடிக்கப்பட்ட படகில் இருந்து ஒரு ஏ. கே. எல். எம். ஜி. ரகத் துப்பாக்கியும், அதற்குரிய மகசின் ஒன்றும், நடுத்தர ரவைகள் தொண்ணூற்றிரண்டும்கைப்பற்றப்பட்டன.

இம்மோதலில் இரு புலிகள் காயங்களுக்குள்ளானார்கள்.

### நவீனரக

படுவதாகவும் தெரியவருகின்றது. இதே வேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நடந்த தாக்குதலில் காயமடைந்த கப்டன் அமரவீரவின் இடத்திற்கு கப்டன் சி. டிசேரா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

### பொதுமுகாமையாளர்

தமிழ் உத்தியோகத்தர்கள் மேற்படி கம்பனியின் பொதுமுகாமையாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த போதிலும், இவர்களை விடத் தகுதியும் திறமையும் குறைந்த சிலர் நியமனம் பெற்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது

### பாஸ்போட்

நிற்கும் மக்களை அணுகி நீங்கள் காத்திருக்காமல் வெகு விரைவில் பாஸ்போர்ட் பெற்றுத் தருவதாக பணம் பறிக்கும் கும்பல்பற்றி அண்மைக் காலங்களில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்நடவடிக்கையில் கோட்டைப் பொலிசார் ஈடுபட்டனர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் 17 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

மடைந்தது. (க, 20, 22)

### நரசிம்மராவ்

கருத்து வெளியிட்டிருப்பதன் மூலம் இந்தியா சிறிலங்கா எதிர்க்கட்சிகளுடன் கை கோர்த்துக் கொண்டது என்றும், இந்தியா தனது வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தால் போதும் என்றும், சிறிலங்கா விவகாரத்தில்இந்தியா தலையிட வேண்டாம் எனவும் பிரதமர் நரசிம்மராவைக் குறை கூறியுள்ளது.

### 309 வெற்றிடத்திற்கு

காக நேற்றுவரைஐயாயிரத்து இருநூறு பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கான பரீட்சை அடுத்தமாத நடுப்பகுதியில் நடைபெறும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை மேற்படி பதவிகளுக்கான போட்டிப்பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில் பலர் அடிப்படைத்தகுதி(கல்வித்தகைமை) அற்றவர்கள் எனவும் இவர்களுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். இதேவேளை பலர் விண்ணப்ப படிவத்துடன் காசுக்கட்டளையைப் பெற்றதற்கான ரசீதை இணைத்து அனுப்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

### யாழ்

பிரிவிற்கு உட்பட்ட மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் மக்களின் பல குறைபாடுகளுக்கு கூடிய விரைவில் தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என்றும் அவை மேலும் தெரிவித்துள்ளன. (ச)

சகல உண்மைகளையும் சரியாக அறிந்து கொண்டால் நிலைமையை சரியான முறையில் மதிப்பீடு செய்ய உதவியாக இருந்திருக்கும் அவ்வாறு செய்யாமல் அறிக்கைகளை வெளியிடுவதையிட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் கருத்து வேறுபாடுகளை உருவாக்கும் முயற்சிகளில் இலங்கையிலோ இந்தியாவிலோ இருக்கும் சீர்குலைக்கும் சக்திகள் மேற்கொள்வதுதுரதிஷ்டவசமானதாகும்.

கடந்த காலத்தில் எழுந்த பிரச்சினைகள் பரஸ்பர நல்லெண்ணம், புரிந்துணர்வு என்பவற்றின் அடிப்படையில் தீர்க்கப்பட்டுள்ளன. எனவே இத்தகைய நெருக்கடியான விடயங்கள் பற்றிக் கருத்து வெளியிடும்போது இரு நாடுகளையும் சேர்ந்த வெகுசனத் தொடர்பு சாதனங்கள் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பதாகவும்வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

### உணவு

நான்கு கட்ட விநியோகமோ அல்லது உணவு முத்திரைக்கான கொடுப்பனவுகளோ இதுவரைக்கும் வழங்கப்படவில்லை. இது பற்றிவேலணை ப.நோ.கூ. சங்க பொதுமுகாமையாளரைக் கேட்டபோது.

தங்களிடம் போதியளவு உணவுப்பொருட்கள் கையிருப்பில் உள்ளதாகவும் தங்களுக்கு வேலணை உ.அ. அதிபர் காரியாலயத்தில் இருந்து இதுவரைக்கும் நிவாரணம் வழங்க வேண்டியவர்களுக்கான பெயர்ப்பட்டியல் கிடைக்கவில்லை என்றும் கிடைத்ததும் உடனடியாக உலர் உணவு விநியோகம் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.